# திருக்குறள் வலியுறுத்தும் கொல்லாமை அறம்

**மு.கயல்விழி,**

**முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்),**
**தமிழ்த்துறை,**
**தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி(தன்னாட்சி)**
**பெரம்பலூர்-*621220***

**முகவுரை**

இந்தப் பூவுலகில் மனிதனே தலைசிறந்த படைப்பாவான். பகுத்தறிவு (Rational)என்ற ஆற்றல் அவனை இந்நிலைக்கு உயர்த்திற்று. மனித உடலின் கட்டமைப்பைக் கூர்ந்து நோக்கும் எவரும் அது சைவ உணவை உட்கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டதை எளிதில் உணர்வர். மனிதனது கைநகங்களின் அமைப்பும் , பல் அமைப்பும் அவன் சாகப்பட்சிணி என்பதை உணர்த்தும். இதனால் தான் வள்ளலார் முதலிய அருளாளர்கள் கொல்லாமையை உலக உயிர்கட்கு உணர்த்திவிட்டுச் சென்றனர். உலக மக்கள் உயர்வதற்காகத் திருக்குறள் என்ற உலகப்பொதுமறையை உருவாக்கியளித்த வள்ளுவர் பெருந்தகையும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இதையே ஆழமாக வலியுறுத்துகின்றார். கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் அவர் வலியுறுத்தித் திருக்குறளில் அதற்கென தனி அதிகாரங்கள் வகுத்தளித்தார். இந்நூலைக் கற்கும் உயிர்கள் இவற்றால் வீடுபேற்றை அடைந்து உய்வுபெறும் வழியினிற்கு ஆற்றுப்படுத்துகின்றார்.கொல்லாமை என்பதை அறமாகவும் , நோன்பாகவுமே அன்னார் கருதினார். அவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கொல்லாமை என்னும் அறம்**

கொல்லாமை என்பது மனிதன் பிற உயிர்களைத் துன்புறுத்திக் கொல்லாமல் இருத்தலாகும். கொல்லாமையை வலியுறுத்த வந்த வள்ளுவர் மனிதன் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய முதன்மையான அறமாக அதை வலியுறுத்துகின்றார். மனித வாழ்வு என்பது அறங்களின் அடிப்படையில் அமையப்பெற்றது. அறமற்ற வாழ்க்கை அவனுக்குப் பயனற்றது என்பதுடன் அவனுக்குப் பலவிதத் தீவினைகளை வழங்கி விடும். உலகிலுள்ள பல்வேறு அறங்களில் கொல்லாமை அறமே முதன்மையானது. கொல்லாமை நோன்பைக் கடைபிடிக்கும் மனிதர்கள் தீவினைகள் நீங்கிப் பெருவாழ்வு பெறுவார் . என்பதைக் கீழ்க்கண்ட குறள் மூலம் வள்ளுவர் வலியுறுத்துகின்றார்

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாந் தரும்"

(குறள்:321)

மனித வாழ்வின் இறுதி நோக்கம் வீடுபேற்றை அடைதலேயாகும். ஆனால் அது மனிதற்கு எளிய காரியமன்று. அவ்வீடுபேற்றை அளிக்கும் தலைசிறந்த கருவியே கொல்லாமையாகும். கொல்லாமை நோன்பு மேற்கொண்டொழுகும் பெரியோர்களுக்கு அவர்கள் வாழும் பிறப்பே இறுதியான பிறப்பாகும். மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து இளைத்தல் என்பது அவ்வுயிர்களுக்குக் கிடையா. வீடுபேறு அடைவதற்குரிய வழியை "நல் ஆறு" என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இந்த நல் ஆறு என்பது கொல்லாமை என்று கீழ்க்கண்ட பாடல் உணர்த்தும்:

"நல்லாறு எனப்படுவது யாதென்றால் யாதொன்றும்

கொல்லாமை சூழும் நெறி"

(குறள்:324)

உலக வாழ்க்கையில் உள்ள தீமைகளையும் நிலையின்மையையும் நன்குணர்ந்து உலகவாழ்க்கையைத் துறந்து துறவு மேற்கொண்டொழுகும் பெரியோர்களின் செயலைக்காட்டிலும், இல்லறத்தில் நின்று , நல்லறம் காத்து , கொல்லாமை நோன்பை மேற்கொண்டொழுகும் மனிதர்களே உயர்ந்தோராகக் கருதப்படுவர். அவர்கள் யோகங்களில் தலைசிறந்த கர்மயோகத்தைப் பின்பற்றி வீடுபேற்றை எளிதில் அடைகின்றனர். இதையே கீழ்க்கண்ட குறள் உணர்த்துகின்றது:

"நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சிக்

கொல்லாமை சூழ்வான் தலை"

(குறள்:325)

உலக உயிர்களின் நன்மை தீமை செயல்களுக்கேற்ப இறை சத்தியால்அவற்றிற்குத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. நன்மை செய்வோர் சொர்க்கத்திற்கும், தீமை செய்வோர் நகரத்திற்கும் கூற்றுவனால் கொண்டு செல்லப்படுகின்றனர். எனவே நல்ல செயல்களையே யாண்டும் செய்ய வேண்டும் என்று அறவோர் வலியுறுத்துவர். ஆனால் இவற்றிற்கு மாறாக "வீடுபேறு" என்ற ஒன்று உண்டு. அது மீண்டும் பிறப்பில்லாப் பெருநிலையாகும். அது இறையோடு இரண்டறக் கலக்கும் சுகானந்த நிலையாகும். அவற்றை ஆன்மிகவாதிகள் பேரின்பப் பெருநிலை என்று உரைப்பர். கூற்றுவன் வந்து மனித உயிர்களை இட்டுச்செல்லாத இப்பேறு நிலை கொல்லாமை நோன்பு கடைபிடிக்கும் உயிர்களுக்கு அமையும் என்று வள்ளுவர் கீழ்க்கண்டவாறு வலியுறுத்துகின்றார்:


© 2024, IRJTSR

“கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்

செல்லாது உயிருண்ணும் கூற்று”

(குறள்:326)

மனிதன் கொலைத்தொழிலை எக்காரணம் கொண்டும் செய்யலாகாதுஎன்கின்றார் . வள்ளுவர் உயிர் போகும் நெருக்கடியான சூழல் ஏற்படினும் பிற உயிர்களைக் கொல்லும் பாவச்செயலை யாண்டும் செய்யலாகாது என்கின்றார். தன் உயிர் நீங்கும் நெருக்கடி நிலை தோன்றினும் பிற உயிரைப் .பறிக்கும் பாவத்தொழிலை மனிதன் மேற்கொள்ளக்கூடாது என்று தடைசெய்கின்றார்.

“தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது

இன்னுயிர் நீக்கும் வினை”

(குறள்:327)

இப்பூமியில் வாழும் மனிதர்களில் சிலர் வாழ்நாளெல்லாம் துன்புற்றுவருந்துவர் . நோய் மற்றும் வறுமையால் அவ்வுயிர்கள் துன்புற்று மடியும். இதற்குக் காரணம் ஊழ்வினை என்று சான்றோர் உரைப்பர்.ஆனால் வள்ளுவர் அவ்வாறு இவ்வுயிர்கள் துன்புறுதலுக்குமுற்பிறவியில் செய்த கொலைத்தொழிலே முக்கியக் காரணம் என்று குறிப்பிடுகின்றார். முற்பிறவியில் செய்த கொடிய வினையே மறுபிறப்பிலும் தொடர்ந்து அவர்களுக்குத் துன்பத்தை நல்குகின்றது. எனவே அப்பாவச் செயலைச் செய்யலாகாது என்றுரைக்கின்றார் .இதை கீழ்க்கண்ட குறள் சான்றளிக்கும்:

“உயிர்உடம்பின் நீங்கியார் என்ப செயிர்உடம்பின்

செல்லாத்தீ வாழ்க்கை யவர்”

(குறள்:330)

**புலால் நீத்தார் பெருமை**

புலால் நீத்த பெரியார் பெருமையுடையவராவர். அவர்கள் பெருமை வானினும் உயர்ந்ததாகும்.இதற்கு அடிப்படையான கொல்லாமையை “அறவுடைமை” என்கின்றார் வள்ளுவர். அறவுடையாருக்கு இவ்வுலகமும் உண்டு , அவ்வுலகமும் உண்டு. அவர்களை உலக உயிர்கள் வணங்கிப்போற்றும். அவ்வாறான அருள் வாழ்க்கைக்குக் கொல்லாமையும் புலால் உண்ணாமையுமே காரணமாகும். உலக உயிர்களைக் கொன்று அதன் ஊனைத் தின்று வாழும் வாழ்க்கை எவ்வகையிலும் அறமாகாது என்கின்றார் வள்ளுவர். இதை,

“அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்

பொருளல்ல தவ்வூன் தினல்”

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR 

(குறள்:254)

என்ற பாடல் மூலம் குறிக்கின்றார். புலால் உண்ணும் கொடியவர்கள் நீண்டகாலம் நரகத்திடையே அகப்பட்டுத் துன்புறுவர். அவர்களுக்குக் கொடிய கொள்ளிவாய் நரகமானது விடாது பற்றிக்கொள்ளும். எனவே இப்பிறவியில் அருள் எண்ணம் கொண்டு ஒரு மனிதன் கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் கட்டாயம் பின்பற்றவேண்டும். புலால் உணவு எவ்வாறு வயிற்றிடையே சென்று ஜீரணமாகி அவ்வுடலுடன் இயைந்து போவது போன்று கொலைக்குற்றம் செய்யும் கொடியோர்களை நரகம் விடாமல் ஆட்படுத்தித் தன்னுடன் இணைத்துக்கொள்ளும் என்று எச்சரிக்கின்றார்.

"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண

அண்ணாத்தல் செய்யாறு அளறு"

(குறள்:255)

"கொன்றால் பாவம் தின்றால் போயிற்று" என்ற கோட்பாட்டைப் பலர் பின்பற்றி வாழ்கின்றனர்.அவர்கள் ஒரு உண்மையை உணர்ந்தாரில்லை. உலகில் உள்ள உயிர்கள் யாவும் மனிதனைப் போன்றே தெய்வத்தால் படைக்கப்பட்டுள்ளன. அவை யாவும் மனிதனைப்போன்றே சதையாலும் , இரத்தத்தாலும் ஆனவை. எனவே தன் சதையை வளர்ப்பதற்குப் பிற உயிர்களின் சதையை உண்பது புண்மையானது. அவ்வாறு உண்ணுதல் உடம்பில் உள்ள புண்ணை உண்டலுக்குச் சமமாகும். எனவே ஊன் உண்ணுதலை வள்ளுவர் அறவே வெறுக்கின்றார். இதைக் கீழ்க்கண்ட பாடல் வழியே உணர்த்துகின்றார்:

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்

புண்ணது உணர்வார் பெறின்"

(குறள்:257)

## பிறவிப்பெரும் பயன்

உலகை உய்விக்க வந்த பெரியோரான வள்ளுவர் மனிதன் அறிவில் மேம்பட்டு விளங்க வேண்டுமென்று விரும்பினார். அவ்வாறு அவன் அறிவில் சிறந்தோனாக வாழ்வதற்கு ஊன் உண்ணாமைமுக்கியக் காரணமாய்த்திகழ்வதை எடுத்தோதுகின்றார். கொல்லாமையும் , ஊன் உண்ணாமையும் மெய்ஞானம் என்றும் பிறயாவும் அஞ்ஞானம் என்கின்றார். ஞான அறிவைப்பெறுவதற்கு ஊன் உண்ணல் ஒரு தடையாக இருக்கலாகாது என்கின்றார்.

"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்

உயிரின் தலைப்பிரிந்த ஊன்"

(குறள்:258)



© 2024, IRJTSR 

மனித வாழ்வில் நன்மை பெறுதற்கும் இறையருள் கிட்டுதற்கும் மனிதர் யாகங்களைச் செய்தனர். இதற்காக விலையுயர்ந்த பொருட்களான நெய் முதலிய பூசைப் பொருட்களைச் செலவு செய்தனர். ஆனால் அதில் கிடைக்கும் புண்ணியத்தைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உயர்ந்தது கொல்லாமையாகும் என்கின்றார் வள்ளுவர். ஆயிரம் வேள்விகள் செய்து ஈட்டும் புண்ணியத்தைக் காட்டிலும் ஒரு உயிரைக் கொல்லாமல் இருப்பது சாலவும் சிறந்தது என்கின்றார். இதை உரைக்கும் பாடல் வருமாறு:

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத் துண்ணாமை நன்று"

(குறள்:259)

கொல்லாமை நோன்பையும் புலால் மறுத்தலையும் உடையவர்கள் தெய்வத்தன்மை பெற்று வாழ்வர் . அவர்கள் இவ்வாழ்க்கையிலே தெய்வநிலையைப் பெறுகின்றனர். ஐரோப்பாவில் வாழ்ந்த புகழ்பெற்ற கிறிஸ்தவச் சமயப் பெரியாரான தூய பிரான்சிஸ் முனிவரை (St.Francis of Assisi) இதற்குச் சான்றாகக் காட்டலாம். அவருடைய அருளுள்ளத்தால் பறவைகளும் விலங்குகளும் அவருடன் நட்பு பாராட்டின. அனைத்து உயிர்களும் அவரைத் தம்மினத்தவராகவே எண்ணிப் பழகின. இது போன்று மனிதன் பெறும் அற்புதப் பேற்றை வள்ளுவர் பெருந்தகைபலநூறு ஆண்டகட்கு முன்பே கீழ்க்கண்டவாறு அழகுடன் உரைக்கின்றார்:

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிருந் தொழும்"

(குறள்:260)

புலால் மறுத்தானை தெய்வ பிறவியாக எண்ணி எல்லா உயிர்களும் கைதொழுது வணங்கும். அவன் இப்பூவுலகில்சிறப்புகள் பெற்று வாழ்வாங்கு வாழ்வான். இதனால்தான் உலக உயிர்களிடத்து அன்பும் அக்கறையும் கொண்ட வள்ளுவ நாயனார் கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் ஆழமாக வலியுறுத்துகின்றார். உலகை உய்விக்க உலகப்பொதுமறை அருளிச்செய்த வள்ளுவர் இவ்வாறு உலக உயிர்கள் வாழ்வில் உய்வுபெற்று பிறவிப்பயனை அடையவேண்டும் என்று நல்வழிப்படுத்துகின்றார்.

## நிறைவுரை

"ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்" என்றார் வள்ளலார். வீடுபேறு என்னும் பெரும்பேற்றை அடைவதற்குக் கொல்லாமை முக்கியக் கருவியாகவும் காரணமாகவும் இருப்பதை ஆணித்தரமாக எடுத்தோதுகின்றார். பகவான் புத்தர், மகாவீரர் போன்ற பாரதத்தின் மாபெரும் சமயப்பெரியார்கள் தாம் உருவாக்கிய சமயத்தில் கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் முதற் கோட்பாடாக

வகுத்தனர். அவ்வழியே நின்று வள்ளுவரும் பிற அறங்களைக் காட்டிலும் கொல்லாமை அறத்தையே அதிகம் வலியுறுத்துகின்றார். பிற உயிர்களைத் துன்புறுத்திக் கொன்று அவற்றின் உடல் உறுப்புகளை உண்ணும் புண்மையை அவர் அடியோடு வெறுத்தார். மிகவும் நுட்பமாக அமைக்கப்பெற்ற இம்மானிட வாழ்வின் இறுதி இலக்கான வீடுபேற்றை அடைதற்கு கொல்லாமை நோன்பு முக்கியக் காரணியாய் அமைந்துள்ளதை வள்ளுவப் பெருந்தகையாளர் தாம்இயற்றிய திருக்குறளில் நன்கு பதிவுசெய்துவிட்டுச் சென்றுள்ளார்.

**உசாத்துணை நூல்கள்(Bibliography)**

[1] திருக்குறள்-புலியூர் கேசிகன் உரை, 2009, சென்னை, பூம்புகார் பதிப்பகம்

[2] திருக்குறள்- பரிமேலழகர் உரை, 2009, சென்னை, சாரதா பதிப்பகம்

[3] திருக்குறள்-தெளிவுரை-மு.வரதராசன்உரை, 1949,சென்னை,

[4] திருநெல்வேலிசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 